[1970 நவம்பர் 27

Mudumalai Wild Life Sanctuary

* 39 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Expert Committee of the Indian Wild Life Board of the Government of India visited the Mudumalai Wild Life Sanctuary during February 1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) ஆம்.

இந்திய அரசு அமைத்த இந்திய வன விலங்குகள் வாரியத்தின் வல்லுநர்க் குழு, 31—1—1970 முதல் 3—2—1970 வரை முதுமலை வன விலங்குகள் உய்விடத்திற்குச் சென்று பார்வையிட்டது. மேற் சொன்ன உய்விடத்திற்கு அக்குழுவினர் சென்று பார்வையிட்டது பற்றிய அதிகார பூர்வமான அறிக்கை எதிர்ப்பார்க்கப்படுகிறது.

Thiru K. VINAYAKAM : Sir, what are the different kinds of wild animals that are found in the Mudumalai area and are there any possibilities of rearing lions which are found in the Gir forests in Rajasthan?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் மான், புலி, காட்டு எருமை போன்ற மிருகங்கள்தான் இருக்கின்றன. பெரும்பாலும், இராஜஸ்தான் பகுதியில்தான் சிங்கம் இருப்பதாகச் சொல்கிருர்கள். அதுகூட சரியான தகவல் இல்லை. இந்தியாவிலேயே எங்கும் சிங்கம் இருப்பதாகத் தகவல் இல்லை. முதுமலையில் சிங்கம் இல்லை என்று தகவல் சொல்லு கிருர்கள்.

கொடைக்கானல் மலைப்பகுதியில் ரப்பர் பயிர்

* 40 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

கொடைக்கானல் மலைப் பகுதியில் ரப்பர் பயிர் செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை:

Thiru K. VINAYAKAM : Sir, how is it not possible to grow these rubber plantations in that area? What are the congenial conditions that are required for that and how they are absent in the Kodaikanal Hills?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழ்நாட்டில் பொதுவாக, கன்யாகுமரிப் பகுதியில் தான் ரப்பர் பயிரிடுவதற்கான சீதோஷ்ண நிலை இருக்கிறது என்று வல்லுநர்கள் கூறுகிருர்கள். அத்தகைய சீதோஷ்ணநிலையில் தான் ரப்பர் வளரும் என்று கூறுகிருர்கள். கொடைக்கானல் பகுதியில் ஒரு தனியார் ரப்பர் தோட்டம் வைத்து இருக்கிருர். கன்யாகுமரியில் கிடைக்கிற தரத்திற்கும், கொடைக்

1970 நவம்பர் 27]

கானலில் கிடைக்கிற தரம் குறைவாக இருக்கிறது என்று வல்லு நர்கள் கூறுகிருர்கள். இதற்கு, கொடைக்கானலில் இருக்கும் சீதோஷ்ணநிலை போதவில்லை என்று சொல்லுகிருர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 21-ம், 22-ம், முதலமைச்சரின் வேண்டுகோளின்படி தள்ளி வைக்கப்படுகின்றன.

வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

திரு. கே. வினயகம் : நான் கையை உயர்த்திக் கொண்டே இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கொடுத்த உறுப்பினர் களில் கிட்டத்தட்ட பாதி உறுப்பினர்கள் அவைக்கு வரவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, it is the *force* of habit you are rushing through questions . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அல்ல. 20 கேள்வி களுக்கும் கேள்வி கொடுத்த உறுப்பினர்கள் வந்து இருந்தால், துணைக் கேள்விகள் போட்டு இருப்பார்கள். உறுப்பினர்களில் பாதி பேர் வரவில்லை. ஆகவே, இந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள் வரவில்லை என்பது நமக்கு தெரியாது.

* குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட் டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(2) ஒற்றி வைப்புத் தீர்மானங்கள்

(அ) அண்ணமலைப்பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. மார்ட்டின், திரு. ஆர். கருப்பையா, திரு. கே. வினயகம், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோர் "அண்ணமலை சர்வகலாசாலையில் மாணவர்கள் வேலைநிறுத்தத்தைப் பற்றி" விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பிலே, திரு. டி. மார்ட்டின், திரு. ஆர். கருப்பையா, திரு. கே. வினயகம், திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோர் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர்கள். ஆகவே, திரு. கே. வினயகம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. கே. வினயகம் : தலைவரவர்களே, நான் நேற்று ஒற்றி வைப்புத் தீர்மானத்தின்மீது பேசியதால், இன்று திரு. ஆர். கருப்பையா அவர்களுக்கு பேச வாய்ப்பளிக்க வேண்டும்.

திரு. ஆர். கருப்பையா : பேரவைத்தலைவரவர்களே, கடந்த 2 தினங்களாக அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் அறிவியல் பகுதிகள் மூடப்பட்டு விட்டன. காலவரையறையின்றி இப்படி திடீரென்று பல்கலைக்கழகம் மூடப்படுவதால், மாணவர்களுக்கு ஏற்படும் கஷ்டம் சொல்லி முடியாது. நான் அண்ணமலை பல்கலைக்கழகத்திலே பயின்றவன். இதற்கு முன்னலே பல்கலைக்கழகம் மூடப்பட்டு